DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.50/2025**

PROSECUTION WITNESS No. 10

| | |
|---|---|
| Name | : விஜயபாஸ்கர் |
| Father's Name | : பற்குணன் |
| Age | : 42 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 11th day of December, 2025.

---

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது எண்–4 மீன்பிடி துறைமுக காவல்நிலையத்தில் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.04.2024 அன்று கே–11 சிஎம்பிடி காவல்நிலையத்தில் சட்டம் ஒழுங்கு ஆய்வாளராக பணிபுரிந்தபோது உதவி ஆய்வாளர் சரவணன் பதிவுசெய்து வைத்திருந்த சந்தேக மரணவழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 29.04.2024 அன்று சம்பவ இடம் சென்று சாட்சிகள் பொன்மாலா, கோபாலகிருஷ்ணன், சரவணன், வாளாதிபாண்டி, அஜித்குமார், கண்ணதாசன், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவினை 174 கு.வி.மு.ச பிரிவிலிருந்து 294(b), 323, 302, இ.த.சா.

மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.7,** பின்பு எதிரியை தேடிவந்ததில் எனக்கு கிடைத்த ரகசியத் தகவலின் பேரில், கோயம்பேடு மார்க்கெட், ஈரோடு–4 கேட் அருகே எதிரியை சாட்சிகள் ஜெயக்குமார் மற்றும் கிருபாகரன் ஆகியோர் முன்னிலையில் கைதுசெய்து விசாரிக்க அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். சாட்சிகள் ஜெயக்குமார் மற்றும் கிருபாகரன் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவுசெய்தேன். பின்பு எதிரியை 29.04.2024 அன்று 20.45 மணியளவில் நிலையம் அழைத்துவந்து திரேகப் பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்தேன். மறுநாள் எதிரியை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினேன். நான் பணிமாறுதலாகி சென்றதால் வழக்கு கோப்பினை எனக்குபின் வந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அ.சா.2 எனது விசாரணையில் ஆஜர் எதிரி என் தந்தையை பார்த்து என் சந்தேசத்திற்கு தொல்லையாக இருக்கிற நீ இத்தோடு தொலைந்துபோ, என்று கொலைவெறியுடன் தள்ளிவிட்டதாக கூறியுள்ளார். அ.சா.3 எனது விசாரணையில் ஆஜர் எதிரி இறந்துபோனவரைப் பார்த்து என் சந்தேசத்திற்கு தொல்லையாக இருக்கிற நீ இத்தோடு தொலைந்துபோ, என்று கொலைவெறியுடன் தள்ளிவிட்டதாக கூறியுள்ளார். அ.சா.8 எனது விசாரணையில் அறையில் தானும், அ.சா.4–ம் வீட்டில் இருந்த போது மதியம் சுமார் 2.30 மணியளவில் வீட்டு ஓனர் அம்மாவிடம் வீண் தகராறு செய்து கையால் அடித்து விட்டார் என்றும், இதைப்பார்த்த மைக்கேல் துரைப்பாண்டி சத்தம் போடவே எதிரி பயந்து 2 வது மாடிக்கு மேலே உள்ள இரும்பு சீட்டில் ஏறி மறைந்து கொண்டார் என்றும், பின்னால் சென்ற

மைக்கேல் துரைப்பாண்டியின் அலரல் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டி மாடியில் பார்த்த போது, அங்கு அவர் தலையில் அடிபட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும் ஆஜர் எதிரி இரும்பு சீட்டிலிருந்து கீழே இறங்கி தப்பி ஓடிவிட்டார் என்றும் கூறியுள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

இவ்வழக்கு குறித்து எனக்கு நன்கு தெரியும். சட்டப்பிரிவு மாற்றம் செய்ய நான் நீதிமன்றத்திலோ, அல்லது எனது உயர் அதிகாரியிடமோ, அனுமதி பெற்றேனா என்றால் தகவல் கூறிதான் சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தேன். அதுபோல் சட்டப்பிரிவு மாற்று அறிக்கையில் பதிவுசெய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கு முறையாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அனைத்து சாட்சிகளும் எனது விசாரணையில் இறந்தநபர் எப்போதும் குடிபோதையில் இருப்பார் என்று கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல குடிப்பழக்கம் இருந்தது என்றுதான் கூறியுள்ளார்கள். இறந்துபோன நபர் மதுபோதையில்தான் தவறி விழுந்துவிட்டார் என்றாலும், அவர் மரணத்திற்கு எதிரி காரணமில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் நான் எந்த சான்று பொருட்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக எதிரிமீது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |